**தலைப்பு 25 - எல்லை நிர்ணய ஆணைக்குழு**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பொழிப்பு அறிக்கை 2022 மே 26 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூன் 08 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு ஆணைக்குழுவின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்,

(ஆ) முன்னைய வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது.

## 1.6. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) நிதிச்செயலாற்றல் கூற்று**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | ஆணைக்குழு 2020 மற்றும் 2021 வருடங்களின் போது திறைசேரிக்கு வழங்கப்பட்ட முறையே ரூபா 22,719 மற்றும் ரூபா 141,663 தொகையினை நிதிச் செயலாற்றல் கூற்றில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை | இது போன்று குறைபாடுகள் எதிர்காலத்தில் ஏற்படாதிருப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | சரியாக கணக்கிடப்பட வேண்டும். |
| (ii) | 2021 நவம்பர் 21 ஆந் திகதிய இலக்கம் 2021/03 கொண்ட பொதுக் கணக்கு வழிகாட்டலின் 7.5 பந்தியின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிச் செயலாற்றல் கூற்றின் மிகுதி கட்டுநிதி இணக்கக் கூற்றின் படி மிகுதியின் மற்றும் வருட | எதிர்வரும் வருடங்களில் ஒப்பீடு செய்யப்பட்டு மற்றும் சரியான மதிப்பீட்டினையும் உட்படுத்துமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | கட்டுநிதி மிகுதியினை இணக்கக் கூற்று மிகுதியுடன் ஒப்பீடு செய்யப்பட வேண்டியதுடன் 2020 வருட ஒப்பீட்டு மதிப்பீட்டினை சரியாக காட்டப்பட வேண்டும். |

இறுதி கட்டுநிதி மிகுதியின் கூட்டுமொத்தத்துடன் சமமாக வேண்டியுள்ளதுடன் 2020 வருடத்திற்காக ஒப்பீட்டு எண்ணிக்கையையும் அதன்படி காட்டப்பட வேண்டியுள்ள போதிலும் ஆணைக்குழுவின் மீளாய்வாண்டின் கட்டுநிதி மீதியினை அவ்வாறு இணக்கக்கூற்று மிகுதியுடன் இணங்கவில்லை. 2020 வருடத்திற்கான ஒப்பீட்டு மதிப்பீட்டினையும் சரியாக காட்டப்படவில்லை.

**(ஆ) காசுப்பாய்ச்சல் கூற்று**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | ஆணைக்குழு மூலமாக நடவடிக்கை செயற்பாடுகளிலிருந்து உருவான காசுப்பாய்ச்சலினை கணக்கிடும் போது கட்டணங்கள், மிகைக் கட்டணங்கள், தண்டப்பணம் மற்றும் உரிமப் பத்திரக் கட்டணங்கள், முற்பணம் அறவிடல்கள் மற்றும் வைப்புக்கள் பெற்றவைகள் ஆகியன உட்படுத்தப்பட்டிருக்கவில்லை இதன் காரணமாக ஆணைக்குழுவினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த காசுப்பாய்ச்சல் கூற்றில் நடவடிக்கை செயற்பாடுகளிலிருந்து உருவான காசுப்பாய்ச்சல் சரியாக இருக்கவில்லை. மேலும் 2020 ஆம் ஆண்டிற்கான மீள்சீராக்கல் செய்யப்பட்ட கணக்குகள் சமர்ப்பிக்கும் போதும் நடவடிக்கை செயற்பாடுகள் ஊடாக உருவான | எதிர்வரும் வருடங்களில் காசுப்பாய்ச்சலினை கணக்கிடுவது தொடர்பாக சகல மதிப்பீடுகளையும் உட்படுத்துமாறு அதிகாரிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். | பிழையின்றி கணக்கிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காசுப்பாய்ச்சலினை கணக்கிடுவதற்கான கட்டணங்கள், மிகைக் கட்டணங்கள், தண்டப்பணம் மற்றும் உரிமப் பத்திர கட்டணங்கள், முற்பணம் அறவிடல்கள் மற்றும் வைப்புக்கள் பெற்றவைகள் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை | | |
| (ii) | ஆணைக்குழுவின் தனியார் சம்பளங்கள் மற்றும் நடவடிக்கை செலவினங்கள் ரூபா 11,116,932 எனினும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்றில் அதனை ரூபா 10,618,856 என காட்டப்பட்டிருந்தது. மேலும் ஆணைக்குழுவினால் மீள்சீராக்கல் செய்யப்பட்ட 2020 வருடத்திற்கான தனியார் சம்பளங்கள் மற்றும் நடவடிக்கை செலவினம் சரியான முறையில் காசுப்பாய்ச்சல் கூற்றினுள் சீராக்கப்படவில்லை. | எதிர்வரும் வருடங்களில் காசுப்பாய்ச்சலினை கணக்கிடுவது தொடர்பாக சகல மதிப்பீடுகளையும் உட்படுத்துமாறு அதிகாரிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். | பிழையின்றி கணக்கிடப்பட வேண்டும். |
| (iii) | ஆணைக்குழுவினால் ரூபா 6,400 ஏனைய செலவினத் தலைப்புக்களுக்காக மீளாய்வு வருடத்தில் செலவிடப்பட்டிருந்த போதிலும் அதனை சரியாக காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை. மேலும் 2020 வருடத்திற்கான மீள்சீராக்கல் செய்யப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்றினை தயாரிக்கும் போது ஏனைய செலவின தலைப்புக்களுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினை உட்படுத்தப்பட்டிருக்கவில்லை | ஏனைய செலவின தலைப்புக்களுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் பிழையின்றி உட்படுத்துமாறு அதிகாரிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். | பிழையின்றி கணக்கிடப்படல் வேண்டும். |

### 1.6.2 அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் பண வரவுகள் ரூபா 99,300 ஆக இருந்த போதிலும் வருடாந்த இணக்கக் கூற்றில் வரவுகளாக வருடாந்த ஆரம்ப மீதியினையும் உள்ளடங்களாக ரூபா 978,857 என காட்டப்பட்டிருந்தது. | இது போன்று குறைபாடுகள் எதிர்காலத்தில் ஏற்படாதவாறு நடவடிக்கை மேற்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. | பிழையின்றி மீதிகள் பதியப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் செலவின மதிப்பீட்டினை தயாரிக்கப்படாமையின் காரணமாக 02 மூலதன விடயங்களின் மொத்தம் ரூபா 150,000 ஆன முழு ஒதுக்கீடும் சேமிக்கப்பட்டிருந்தது. | கொவிட் தொற்று காரணமாக சம்பந்தப்பட்ட செலவின விடயங்களின் ஒதுக்கீடுகள் சேமிக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமானம் 50 இன் பிரகாரம் செலவின மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |

### 2.2 சட்டம், ஒழுங்கு மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

மாதிரி கணக்காய்வு பரீட்சிப்புக்களில் அவதானிக்கப்பட்ட சட்டம், ஒழுங்கு மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணக்கம் காணப்படாத சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | | | |
| --- | --- | --- | --- | --- |
| | சட்டம், ஒழுங்கு மற்றும் பிரமாணங்களின் அவதானம் | இணங்காமை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| (அ) | 2018 இலக்கம் 19 கொண்ட தேசிய கணக்காய்வு சட்ட மூலத்தின் 16.2 ஆம் பிரிவு | மீளாய்வு ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயலாற்றல் அறிக்கையின் வரைவினை நிதிக் கூற்றுக்களுடன் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இணங்கப்படுகின்றது. | சட்டமூலத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) 2018 சனவரி 24 திகதி கொண்ட இலக்கம் 02/2018 கொண்ட பொது நிர்வாக சுற்றறிக்கை | ஆணைக்குழுவினால் மீளாய்வு ஆண்டிற்காக மனிதவள அபிவிருத்தி திட்டமொன்றினை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | இணங்கப்படுகின்றது | சுற்றறிக்கையின் படி மனிதவள திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ பலவீனங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) ஆணைக்குழுவிற்காக சட்டமூலம் ஒன்றினை தயாரிக்கும் தேவைப்பாடு தொடர்பாக 2017 மற்றும் 2018 வருடங்களில் அமைச்சரவை வரைவு பத்திரம் ஒன்றினை சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கான அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாமையினால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்ட திகதி வரையிலும் சட்டமூலத்தினை தயாரிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை | அவதானிப்புடன் உடன்படுகின்றேன். | சட்டமூலத்தினை தயாரிக்கும் நடவடிக்கை விரைவில் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) சனாதிபதி செயலகத்திற்கு சொந்தமான 02 வாகனங்கள், 2016 ஆம் ஆண்டு முதல் ஆணைக்குழுவின் கருமங்களுக்காக பாவனை செய்யப்பட்ட திகதியான 2022 சனவரி 31 ஆந் திகதி வரையிலும் இவ் இரண்டு வாகனங்களையும் ஆணைக்குழுவிடம் கையேற்கப்பட்டிருக்கவில்லை | சனாதிபதி செயலகத்திடம் விசாரித்து மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியத் தருகின்றேன். | அவ்வாகனங்களை ஆணைக்குழுவிடம் கையேற்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) அரசியல் சட்டத்தின் மூலம் ஆணைக்குழுவின் பொறுப்புக்கள் மற்றும் அதிகாரங்கள் தொடர்பாக தௌிவுபடுத்தப்பட்டில்லாத போதிலும் ஆணைக்குழுவிடம் ஒதுக்க சட்டமூலமாக 2020 மற்றும் 2021 வருடங்களில் முறையே ரூபா 13.32 மில்லியன் மற்றும் ரூபா 14.22 மில்லியன் ஒதுக்கி கொடுக்கப்பட்டிருந்ததுடன் அவ்ஒதுக்கீடுகளிலிருந்து முறையே ரூபா 12.08 மற்றும் ரூபா 11.13 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. | குறிப்பிடத்தக்க அதிகாரத்தினை ஒப்படைத்து தருமாறு சம்பந்தப்பட்ட தரப்பினரை அறிவுறுத்தப்பட்டுள்ளது. | ஆணைக்குழுவிற்கு குறிப்பிடத்தக்க பொறுப்பு மற்றும் அதிகாரம் ஒப்படைத்தலினை மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 4. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2016 பெப்ரவரி 05 ஆந் திகதி இலக்கம் DMS/1029 கடிதத்தில் ஆணைக்குழுவிடம் 15 பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்த துடன் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறாக அதில் 05 பதவிகள் வெற்றிடங்களாக இருந்தன. சிரேஷ்ட மட்டத்திலான பதவியாகிய செயலாளர் பதவி மற்றும் கணக்காளர் பதவி 2016 ஆம் ஆண்டு முதல் வெற்றிடமாக இருந்ததுடன் அவற்றிற்கு 2016 வருடம் முதல் பதில் பணிபுரியும் அடிப்படையில் இரு அதிகாரிகள் இணைக்கப்பட்டிருந்தனர். | உடன்படுகின்றேன். | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |